# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 389/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 7<br>Defense<br>Court |
| Name | திரு. முகமது கனி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of November 2023.

நான் தற்போது திருநெல்வேலியில் உள்ள ஷீபா மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 28/04/2009 ஆம் தேதி மாலை 05.25 மணியளவில் சுப்பிரமணியன் என்ற நபரை அவரது தந்தை முத்துகிருஷ்ணன் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் இரு சக்கர வாகனத்தில் நான்குநேரி டூ மூலைக்கரைப்பட்டி ரோட்டில் சென்று கொண்டிருந்த போது மற்றொரு இருசக்கர வாகனத்தில் மோதப்பட்டு காயம் அடைந்ததாக கூறினார், அவர் சுய நினைவுடன் இருந்தார்.

அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1) இடது கணுக்காலில் வீக்க காயம் இருந்தது அதை நுண்கதிர் படம் எடுத்ததில் கணுக்காலின் உள்பாகத்தில் ஒரு எலும்பு முறிவு காணப்பட்டது. 2) இடது கால் பெருவிரலில் உள்பாகத்தில் 2X3 செ.மீ அளவுள்ள ஒரு சிராயப்பு காயம் இருந்தது. 3) இடது முழங்காலில் 4X5 செ.மீ அளவுள்ள சிதைந்த சிராய்ப்பு காயம் இருந்தது. 4) இடது தொடையின் வெளிபாகத்தில்

20X10 செ.மீ அளவுள்ள ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. 5) இடது கையின் மேல் பாகத்தில் (Meta carpel ) .5X.5 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது. 6)இடது முழங்கையில் 2X3 செ.மீ அளவுள்ள சிதைந்த சிராய்ப்பு காயம் இருந்தது. 7) இடது மேல் வாய் பகுதியில் 3X4 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது. 8) இடது கண் இமைக்கு மேல் 5X2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது. 9) வலது கண் இமையின் வெளிபாகத்தில் 2X.5X.5 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் அதை சுற்றி சிராய்ப்பு காயம் இருந்தது.

அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 1வது காயம் கொடுங்காயம் எனவும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.5** ஆகும். மேற்சொன்ன காயங்கள் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஒரு நபர் குறுக்கே மற்றொரு வாகனத்தில் வந்து விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரணை செயதனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பொதுவாக ஒரு நபர் வேகமாக இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தன்னிச்சையாக கீழே விழுந்தாலும் நின்று கொண்டிருக்கும் வாகனத்தில் மோதினாலும் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**